373

M. 1630. MARCH. 1923.

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷால் மஹறிபா என்னும்

ஞானசூரியன்

இது ஒரு சிறந்த மாதாரம்பத் தமிழ்ப் பத்திரிகை.

GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 1	துந்துபிஸு பங்குனிமீ 1உ 1923ஸு மார்ச்சுமீ 14உ	இதழ் 12

Vol. I — No. 12.

பொருளடக்கம்.

விஷயம்.	பக்கம்.
கடவுள் வணக்கம்	265
வானப்பிரஸ்தம்—ஞானக்களஞ்சியம்	266
சன்னியாசம்—ஞானக்களஞ்சியம்	268
சுகாதாரம்—எஸ். வி. ஜி. பாலன், திருவாரூர்	270
செல்வம்—வி சேஷாத்திரி	271
வறுமை—ப. வீரப்பத் தஞ்சவராயன்	273
அன்பே தீர்ப்பு—லோகோபகாரி	277
வைத்தியம்—க. ஞானபூபதி	282
மனுமுறைகண்ட வாசகம்—வடலூர் வள்ளல்	284
சங்கீதம்—ஞானக்களஞ்சியம்	287

இப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

"ஞான சூரியன்"

சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு	வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட	ரூ 1—8—0
பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு		ரூ 2—0—0
தனி சஞ்சிகை விலை		ரூ 0—3—0

மாதிரிப் பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனமாக அனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாமேனும் முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ. 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அசனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாசத்திற்கு	...	ரூபா	7—0—0
அரை பக்கத்திற்கு	,,	,,	4—0—0
கால் பக்கத்திற்கு	,,	,,	2—8—0

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ ரூ வீதம் கழித்து வாங்கப்படும் எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும். நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு. பதில் தெரிய விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவும்.

முன்பணமாக ரூபாய் 25 (இருபத்தைந்து) செலுத்தும் ஜீவிய சந்தாதாரர் (Life Subscribers) கட்கு எக்காலத்திலும் பத்திரிகை இனமாக அனுப்புவதுடன் அவர்கள் பெயரை ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பெறும்.

கருணையானந்த ஞானபூபதி,
பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத்துணை.

ஞானசூரியன்.

இது ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 1.] துந்துபிஞு பங்குனிமீ 1வ. [இதழ் 12.

கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக ருணர்வைப் பிணித்தமல
இருளா னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறா
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்து மாகிப்
பகர்வனவெல் லாமாகி யல்ல தாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாந்
தோயாத வறிவாகிச் சுத்த மாகி
நிகரில்பசு பதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பா னினைதல் செய்வாம்.

(தாயுமான வள்ளல்.)

ஞானசூரியன்.

துந்துபிவரு பங்குனிமீ 1உ.

வானப்பிரத்தம்.

அறமா ரில்வாழ்க் கையிலிருந்து ஐம்பா னாண்டு சென்றதற்பின்
நெறியாங் குடும்பந் தனைநீங்கி நீடைம் புலனை நனியொடுக்கி
மறைதேர் வனத்திற் போந்திருந்து வழுத்தும் விருப்பு வெறுப்பகற்றிப்
பிறழா தொழுகு மெழில்வானப் பிரத்தாச் சிரம முறையுரைப்பாம்.

இல்லறதருமத்தி விருப்பவன், மனுதரும நூலிற் கூறிய விதி தவறாமல் தருமங்களைச்செய்து பவமொழிந்து பரிசுத்த முடைய புனிதனாகி, பஞ்சேந்திரியங்களை யடக்கி தபோவனத்திற்கு செல்லத்தக்க வானப்பிரத்த ஆச்சிரமத்தை யுடைதல் வேண்டும்.

இல்லற வாழ்க்கையில் விருப்பமிருந்தால், 50 வயது வரையிலும் குடும்பத்திலிருந்து புத்திரர் பவுத்திரர்களைக்கண்டு ஆனந்தித்து அதன்மேல் தன் மனைவியை மகனிடத்தில் ஒப்புவித்தாவது கூடவரப்பிரியமிருந்தால் அழைத்துக்கொண்டாவது உத்தராயன காலத்தில் பூர்வபக்கத்தில் ஓர் சுபவேளையில் வனத்திற் பிரவேசித்தல்வேண்டும். தாடி, மீசை, நகம், சடை, முடி இவைகளை வளர்க்கவேண்டும். மரவுரியாடை, மான்தோல் முதலியவைகளைத் தரிக்கவேண்டும். பசிநோய் வந்தால், காய், கனி, இலை, சருகு, கிழங்கு, தேன் ஆகிய இவைகளையே புசித்தல் வேண்டும். இதுபற்றியே,

தாயுமான வள்ளல்.

"கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்த மூலங்க ளேனும்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி மவுனி யாகி," என்றனர்.

வெய்யில், பனி, குளிர், காற்று மழையாதிகளைச் சகித்தல் வேண்டும். ஆன்மாக்களிடத்தில் ஜீவகாருண்ணியம் பாலித்து,

தன்னுடைய பலிப்பிச்சை இவைகளை யிபன்றவரையில் கொடுக்கவேண்டும், தன்னிடத்தில் வந்தவர்களுக்கு காய், கனி, கிழங்காதிகளால் உபசரணை செய்யவேண்டும். ஐம்புலன்களைப் பொறிவழிச் செல்லா தடக்கவேண்டும். வேதாத்தியயனஞ் செய்து உபநிடதத்தின் பொருள்களை யுணரவேண்டும். சற்குரு உபதேசித்தபடி நடக்கவேண்டும். கோபம், மோகம், மயக்கம் இவைகளை யொழித்து விடவேண்டும். நகரத்திலிருந்து கொண்டுவந்த தானியங்களைச் சமைத்து கடவுளுக்கு நிவேதித்து, தினம் ஒருவேளை அன்னம் 16 கவளம் கணக்காகப் புசித்தல்வேண்டும். மறுமுறை புசிக்கலாகாது. தானம் வாங்கக்கூடாது. காளான், கள், அழிஞ்சிற்பழம், அபின், கஞ்சா, மாமிசாதிகளைப் புசித்தல், மாதர்போகஞ் செய்தல். இவைகள் குற்றமாகும்.

காய்கனி கிழங்காதிகள் அகப்படாவிடில், வனவாசஞ்செய்கின்ற கிருகத்தாச்சிரமத்தோரிடத்தில், தவத்துக்கு இடையூறு நேரிடாமல் யாசகம் செய்துகொள்ளலாம். அவர்களுமில்லாதிருந்தால் சமீபத்திலுள்ள கிராமங்களிற்சென்று இரண்டு கையிலாவது, மரப்பாத்திரம், தொன்னைகளிலாவது 8 கவள அன்னம் வாங்கிப் புசிக்கவேண்டும்.

(*) இயமம்-10, நியமம்-10, சுவத்திகாசனம் முதல் சுகாசனம் ஈறுகச் சொல்லப்பெற்ற ஆசனங்கள்-9. இவைகளை நன்குணர்ந் தனுட்டித்துப், பிராணாயாம விதிப்படி இரேசகம், பூரகஞ்செய்து பஞ்சபூதங்களையும் அவற்றின் பாகங்களையும் பகுத்தறிந்து, (*) பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென்பவற்றை நன்குபுரிந்து சகல ஆசைகளும் நீங்கி முற்றத்துறந்து, அதன்பின் சன்னியாசம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ஞானக்களஞ்சியம்.)

(*) இயமம்-10, நியமம்-10, ஆசனம்-9, பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி இவற்றின் விபரங்களை வேதாந்த பாஸ்கரனீ முதற்பாகம் அட்டாங்கயோக அத்தியாயத்திலும், பிராணாயாம விதியை 3-ம் பாகமாகிய யோக ரகசியத்திலும் பார்த்துணர்க.

சன்னியாசம்.

மன்னும் எழுபா னைந்தாண்டில் வானப் பிரத்த மதுநீங்கிச்
சன்னி யாச மதுதாங்கிச் சரிப்போ ரியலுங் குடீசகனற்
சின்ன முடைய பகூதகன்மேற் சிறந்தஅஞ்சன் பரமாஞ்சன்
என்னு நால்வர் களினியலு மிஃதென் றினிதா யெடுத்துரைப்பாம்.

வானப்பிரத்த ஆச்சிரமத்தி லிருப்பவன் (*) 75 வயது சென்றபின்பு, அறம், பொருள், இன்பங்களுக்காக வேண்டிய சகல பிரயத்தனங்களையும் நீக்கி, காமக்குரோத லோப மோக மத மாச்சரியமென்னும் அறுபகைகளையுங் களைந்து, தாடி, நகம், மீசை, தலைமயிர் இவைகளையழித்து காவிவஸ்திரம், கமண்டலம், தண்டம், பவித்திரம், கோவணம் இவைகளைத் தரித்து, துவைத மற்ற மேலான பிரமஞான நிட்டை செய்யவேண்டும்.

தனக்காக ஓர் இடம் அமைத்துக்கொள்ளாமலும் ஓரிடத்தி லேயே நிலைபெற்றிராமலும் நகரங்களாகிய பட்டினங்களில் ஐந்து இரவும் கிராமங்களில ஓர் இரவும் வசிக்கவேண்டும். உலக

(*) 75 வயதுக்குமேல் சன்னியாசம் பெறவேண்டுமென்று நியம மிருப்பினும் பாலியத்திற் சன்னியாசம் பெறுவதே காரியாம்சமான நெறி. ஆனல், (75) வயதுக்குமேல் சன்னியாசம் பெறவேண்டு மென்று சுருதிகள் முறையிடுகிறதேயெனின், அது இடிந்துவிழுகிற வீட்டுக்கு முட்டுக்கட்டை கொடுக்க முயன்றதுபோல், ஆத்மலாப சம் பந்தமாக ஒரு பிரயோசனத்தையும் அடையாமல் நரைத்துப் பழுத்துச் சாகப்போகிற வீணர்கள், ஏதோ ஒரு பிரயோசனத்தை அடைந்ததாக நினைத்துக்கொள்ளும்படி வேடம் புனைந்துகொள்வதற்காக பக்குவம் நோக்கி ஆன்றோர்கள் சொல்லிவைத்த ஓர்வித உபாய தந்திரமேயன்றி, அவர்களின் உண்மையான கருத்து அங்ஙனமன்று அதன் உண்மை யைச் செவ்வையாய் உணராது, இளமைப் பருவத்தைக் கலவிப் பிரியத் தில் போக்கிவிட்டு, 'சாகுநாளையிலே சிவனேயென ஓதினல் விடுமோ தலைமேல் விதி' என்ற ஆன்றோர் வசனத்தைச் சிந்திக்காமல் 75 - ம் வயதை எதிர்பார்ப்போமாகில், ஒருக்கால் அந்த வயது வரையிலும் உயிரோடிராமல் ஏமாந்து போனலும் போய்விடக்கூடும் அல்லவா? என்பது கவனிக்கத்தக்கது.

விவசாரமாகிய வீண் வார்த்தைகளையும் அறம், பொருள், இன்பங்களைக் குறித்த வார்த்தைகளையும் ஏனைய வார்த்தைகளையும் பேசாமல் மௌன விரதத்துடனே ஏகாங்கியாய் இருக்கவேண்டும். ஒருகாரியத்திலும் மயங்காமல் பிரமசிந்தனை செய்யவேண்டும். ஒருவரிடத்திலும் பகை, உறவு, விருப்பு, வெறுப்பு முதலானவைகளில்லாமல் சாந்த சொரூபியாக விளங்கவேண்டும். துன்பஞ்செய்த பேர்களுக்கும் இன்பமே செய்யவேண்டும்.

திருக்குறள்.

"இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ்செய்து விடல்."

நோய்வந்த காலத்து, எல்லாம் கடவுள் செயலென்றெண்ணி மருந்து புசிக்காதிருக்கவேண்டும். பொன், வெள்ளி, தாம்பிரம், வெண்கலம் முதலான உலோகங்களினாலே செய்த பாத்திரங்களை உபயோகிக்காமல், மூங்கில், மரம், தேங்காய், சுரைக்காய், மண், இலை இவைகளினாற் செய்த பாத்திரங்களை வைத்துக்கொண்டாலுங் கொள்ளலாம்.

குணங்குடியார்.

"செட்டுசெய்ய வேண்டியதில்லை பரதேசிகள்
சட்டியெடுப்பதுவுந் தொல்லை பிச்சைக்கஞ்சிக்கு
திட்டமுடன்வேணுமோ கல்லை."

விதிப்படி நண்பகலில் ஊர்க்குட்சென்று அன்னப்பிட்சை வாங்கி ஒருவேளை அளவாகப் புசிக்கவேண்டும். தாகத்திற்கு ஏரி, குளங்களிலேயே நீர் அருந்தவேண்டும். பிட்சான்னம் அகப்பட்டால் மகிழ்ச்சியும், அகப்படாவிட்டால் துக்கமுமில்லாமல் எல்லாம் நின்செயலென்று பிரம்மத்தியானம் புரிதல் வேண்டும்.

வைராக்கியதீபம்.

உச்சியம் போதின் மீதரும்பசிக்கவ் வூர்வல மாயிலந் தோறும்
பிச்சைகை யிடையிற் காடிகூ ழேனும் பெற்றது பற்றியுள் வெறுப்போ
டிச்சையற் றருந்திப் பொருந்தவே காந்தத் திடையினும் தாகம்வந் தடை
நச்சிநீ ரூரிற் புகுந்துறு தேரி யாதியின் அருந்துதல் நன்றே. [யின்

(இன்னும் வரும்)

(ஞானக்களஞ்சியம்.)

சு கா தா ர ம்

(249 - ம் பக்கத் தொடர்ச்சி.)

நம்முடைய உறுப்பில் ஏதேனும் ஒருபாகத்தில் சிறிய குண்டூசிகூடக் குத்த சகிக்காதபோது ஏன் பிறவுயிரும் அவ்வாறு வருந்தும் என்றிரக்கங் காட்டக்கூடாது. நம்மை யாராயினும் வருத்தமுற்படின் பிறரிடம் சொல்லவோ அல்லது வேறே அதினின்றும் தப்பிப் பிழைக்கக் கூடியதையோ செய்துகொள்ள முடியும். திக்கற்றதும், நம்மையே கெதியெனக் கொண்டதுமான ஆடு, கோழிகளைக் கொல்வதென்றால் அத்தறுவாயில் அதன் நிலை எவ்வாறிருக்குமென்பதை என்னரிய நண்பர்கள் சற்று நிதானித்துப் பார்க்கின் இனியேனும் அத்தீச் செயலுக்கு ஒருப்படார்கள். பல்லுயிரும் அவரைப்போற்றும் அதுபற்றியே,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லாவுயிருந் தொழும்,"

என்றார் நம்பொய்யில் புலவரும்.

மேலும் இதைப்பற்றி வேதாந்த பாஸ்கரனில் ஜீவகாருண்யம் என்ற மகுடத்தில் நம்பத்திரிகாதிபரும் எம் சற்குருவுமான 'ஸ்ரீலஸ்ரீ. சுவாமி கருணையானந்தா' அவர்கள் விரிவாகப் புகட்டியுள்ளார்களாகலின் இன்னும் விவரிப்பின் "மற்றொன்று கூறல்" என்றஞ்சி விடுத்தாம். இன்னும் மாமிசபோஜனம் செய்வதால் பற்பல கொடிய வியாதிகளும், தொத்துநோய்களும் பீடிப்பதாலும், தாமசகுணமும், கோபமும் உண்டாவதாலும் அதை அறவேவிட்டு சத்துவகுண பதார்த்தமாகிய காய், கிழங்கு தானிய வகைகளையே உட்கொள்ளவேண்டிய தவசியம். ஆகாரத்தின் குணபேதத்தாலேயே ஒருவருடைய குணம், ஒழுக்கம் மாறுதலடைகிறதென்பது ஆன்றோர்களுடையவும், யோகிகளுடையவும் சித்தாந்தம். ஆகலின் எவ்வழியிலும் முன்னேற்றமடையம் முந்துறுவோரனைவரும் தங்கள் தங்கள் ஆகாரத்தைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கின் தங்கட்கும் நன்மை பயப்பதோடு பிறருக்கும் பிற உயிர்கட்கும் இதம்புரிவதாகும்.

(இன்னும் வரும்) எஸ். வி. ஜி. பட்லன், திருவாரூர்.

செல்வம்.

செல்வமென்பது பொருட்செல்வம் கல்விச்செல்வம் என இருவகைப்படும். மேலைத் 'தவத்தளவேயாகுமாம் தான்பெற்ற செல்வம்' என்றபடி அவரவர் செய்த பாவபுண்ணியங்களுக்குத் தக்கபடி மனிதஜாதிகளாகிய நாம் இவ்விருவகை செல்வங்களை யும் அடையக்கூடும். இவ்விருவகையான செல்வங்களும் நமது உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதனவா யிருக்கின்றன.

ஆதலால் மானிட ஜென்மமெடுத்த நாம் எவ்வித பாடுபட்டாவது இவ்விருவகைச் செல்வத்தையும் அடையப் பிரயத்தனஞ் செய்யவேண்டும். இவ்விருவகைச் செல்வத்திற்கும் காரணமான இலக்ஷிமி இருக்குமிடம்:—

கரிமீதி லும்பரி முகத்திலும் கடலிலும் கட்டழகு மிகுமனையிலும் [லும்
கந்தமுள மலரிலும் கொடியிலும் குடையிலும் கற்புடைய மகளிர்பா
கரியனைய புயவரசர் வதனத்தி லும்புலவர் கேதமற்றிடு சொல்லிலும்
கிளர்பசு விடத்திலும் கோதற்ற பாதசங் கீதத்திலும் தொனியிலும்
பரிசுத்த முள்ளவ ரிடத்திலும் கொண்டுவரு பாற்குடந் தனிலுமீகைப்
பண்பிலும் தெளிநீரி லும்பிரமக் கிரமம் படைத்தவ ரிடத்தும்நளின
மருமலர் துழாய்வில்வ மிவையினும் செம்மாலின் மார்பிலுறை திருவி [ருப்பாள்
வனராஜகுமரிமடி மீதுவிளையாடல்புரி மணிகொண்டவடிவேலனே.

முதலில் பொருட்செல்வத்தைப் பற்றி பேசுவோம்.

பொருட்செல்வ மென்பது பல வகைப்படும். தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகப் பொருள்களும், மரகதம், மாணிக்கம், நீலம் முதலிய நவரத்தினங்களும், நவதானியங்களும் வீடு, தோட்டம், ஆடு, மடு முதலிய பல்வகைப் பொருள்களும் பொருட்செல்வமாக மதிக்கப்படும்.

பொருளில்லாவிட்டால் ஒருவன் உலகத்தில் தன் வாழ்நாளைச் செலுத்த வேண்டியதில்லை. செலுத்தினாலும் 'பணமில்லாதவன் பிணம்' என்றபடி சவத்திற் றொப்பாவான். எல்லா நன்மைகளைப் படைத்தவனானாலும் பொருளில்லாவிட்டால் அவனுடைய

தாய் தந்தை சகோதரன் சுற்றத்தார்களும் மனையாளும் கூட அவனை விரும்பாள்.

கல்லானே யானாலும் கைப்பொருள் ஒன்றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்.

பொய்யாமொழிப் புலவரும்,

இல்லாரை எல்லாரு மெள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. என்றார்

பொருளிலார்க் கின்பமில்லை புண்ணியமில்லை சற்றும்
மருவிய கீர்த்தியில்லை மைந்தரிற் பெருமையில்லை
கருதிய கருமமில்லை கதிபெற வழியுமில்லை
பெருநிலந் தனிற்சஞ்சாரப் பிரேதமாய் திரிகுவாரே.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

அதாவது, மதிக்கப்படாதவரையும் மதிக்கப்படச் செய்யும் பொருளல்லாமல் ஒருவருக்கு வேறு பொருளில்லை என்றார் நாயனார்

பொருளிருந்தால் அவனுடைய பகைவனும் அவனை நன்கு மதிப்பான். பொருள் சம்பாதிக்குமிடத்து எக்காலத்தும் தர்ம நெறியால் சம்பாதிக்கவேண்டும். சூது, வாது, களவு, துரோகம், பொய், வழக்கு, பொய்சாட்சி முதலிய அதர்ம வழிகளில் சம்பாதிக்கலாகாது. சம்பாதித்த பொருளைக் காப்பாற்றவேண்டும்; காப்பாற்றிய பொருளை விருத்திசெய்யவேண்டும். விருத்தி செய்யாவிட்டால்,

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப் – போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் எழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

(இன்னும் வரும்)

வி. சேஷாத்திரி.

வ று மை ம.

இந்திரன் முதலிய தேவர்களுடைய பதங்களாகிய சுவர்க்காதி லோகங்களையும், நித்யானந்த முத்தி உலகத்தையும் முறையறிந்து அடைவதற்குரிய மனிதர்களுக்கு உறுதியைத் தாத்தக்கதென்று உயர்ந்தோரால் எடுக்கப்பட்டு நூல்களால் விவரித்துக் கூறப்படும் அறம், பொருள், இன்பம் என்பவற்றுள் பொருளானது அறத்தையும் இன்பத்தையும் பயக்கத்தக்க தாதலால் மத்திய தீபமாக அறத்திற்கும் இன்பத்திற்கும் நடுவே அமைக்கப்பெற்றுள்ளது. பொருளே அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கத்தக்கதாதல்,

நாலடியார்.

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்
நடுவண தெய்தா னெய்தும் உலைப்பெய்
தடுவது போலுந் துயர்.

திருக்குறள்.

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

என்னும் பெரியோர் வாக்கியங்களால் தெளிவாகும்.

இவ்விதப் பொருள் இல்லாத விடத்ததே வறுமையாம். இரந்தோர்க்கு இல்லை என்னுமல் வழங்குதலும், மற்ற தர்மங்கள் செய்தலும் ஆகியவற்றால் மறுமை யின்பத்தைத் தேடிக்கொள்ளக் காரணமாயிருப்பது பொருள். இம்மையில் சகல போகங்களையும் குறைவற நுகர்தலும், புகழ்பெறுதலும் முதலியவற்றிற்கும் காரணமாயதும் அப்பொருள். அப்பொருள் கிடைக்கப்பெறாத வறியோர் அந்த இருமைப்பயனையும் அடைய மாட்டார். ஆதலால் அவர் எடுத்த மானிடப்பிறவியாலும் பயனில்லை அவர்கள் நடைப்பிணமாகவே கருதப்படுவர்.

திருக்குறள்.

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையு மின்றி வரும்.

பஞ்சதந்திரப் பாடல்.

பொருளிலார்க் கின்பமில்லைப் புண்ணியமில்லை என்றும்
மருவுறு கீர்த்தியில்லை மாந்தருட் பெருமையில்லை
கருதிய கருமமில்லை கதிபெறு வழியுமில்லை
பெருநிலத் திடைநடக்கும் பிணமெனப் புடுவாரன்றே.

செல்வம் ஒருவனுக்குப் பெருகுவதும் அது தனது பதப் பொருட்கேற்ப அவனை விட்டுப் பிரிந்துவிடுவதும் அதுபோலவே தரித்திரமும் ஒருவனிடத்தில் குடிகொண்டு வருத்தி, தரித் திருக்கமாட்டோம் என்னும் தன் பதார்த்தத்திற்கேற்ப விலகி விடுவதும் முன்சென்மத்தில்செய்த புண்ணியபாவத் தொடர்பின் வழிபதாகும். தனது முயற்சியினால் ஒருவன் பொருள் தேடிச் சம்பன்னனானான் என்பதும் முயற்சியின்மையால் ஒருவன் வறுமைக்கோட்பட்டு வருந்துகிறான் என்பதும் சிறந்ததன்று. ஏனெனில் சிலர் ஓயாமல் ஒழியாமல் வேலைசெய்து சம்பாதித்தும் அன்றன்று வயிறு வளர்க்கவும் இயல்பு இல்லாமல் வருந்துவதையும் சிலர் ஒன்றுக்குமுதவாத சோம்பேறிகளாயிருந்தும் அவர்களுக்கு எவ்விதத்தினாலேயோ செல்வம் பெருகி விடுவதையும் அனுபவத்தில் காண்கிறோம். நற்குண நல்லொழுக்க முடையவர்களுக்குத்தான் செல்வம் உண்டாகும், பெருகும் என்பதும், துற்குணமுடைய கயவர்களுக்குச் செல்வம் கிடைக்காது. வறுமைதான் உண்டாகும் என்பதும் இல்லை. இவையாவும் மேலைத் தவத்தளவேயாகும் என்பதே எவ்வாற்றானும் சிறப்புடைத்து.

நாலடியார்.

நல்லார் நயவ ரிருப்ப நயமிலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம்—தொல்லை
வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணாய்!
நினைப்ப வருவதொன் றில்.

“கொடிது கொடிது வறுமை கொடிது” என்றாள் நம் ஔவை மூதாட்டி. அம்ம! இந்தக் கொடிய வறுமைப்பிணி செய்யும் துன்பத்திற்கு ஓர் அளவேயில்லை. மற்றப் பிணிகள்

ஓரேவிதமான துன்பத்தைக் கொடுக்கும். இந்தப் பிணியோ சகலவிதமான துன்பத்தையும் உண்டாக்கும். இந்தப் பாழும் நோய் "செல்வம்" என்னும் மருந்தாலேயே தீரும். மன்மதனை ஒப்ப அவ்வளவு அழகும் வீமசேனனைப்போல அவ்வளவு மலை போல் பருத்த சரீரமும், பல பராக்கிரமமும் உடையவரும் இந்த வறுமைநோய் உண்டாகுமானால் அவ்வன்மைகள் நெருப்புப்பொறி புகுதப்பெற்ற பஞ்சைப்போல வெகு சீக்கிரத்தில் மறைந்துபோகவே, மேனிவனப்பு ஒழிந்து எலும்பு தோன்றும்படியாக இளைத்து மெலிந்து விடுவார்கள். மிகுதியும் சுறுசுறுப்பும் உழைப்பும் உள்ளவர்களும் தமது தன்மையாவும் இவ்வறுமை நோயால் நலிந்துபோகவே ஒன்றுக்கும் உதவாத திண்ணைதூங்கிச் சோம்பேறிகளாக மாறிவிடுவார்கள். இப்பாழும் தரித்திரம் கற்பக விருக்ஷம்போல வழங்கும் மகா உதாரகுணசீலர்களையும் பரம உலோபியர்களாகச் செய்துவிடும். பாவம்! என் செய்வார்கள்!! "உள்ளபொழுதேது முவந்தளிப்ப தல்லால் மற்றுள்ளளவுமீய விசையுமோ? நீர் நிறைந்த விசாலமான கடலானது தனது நீர் முழுவதையும் அகத்தியமுனிவர் தனது உள்ளங்கையில் உளுந்து அளவாகவரச்செய்து ஆசமனம்பண்ணிவிட்டபிறகு வழக்கமாக தான் மேகத்துக்குக் கொடுத்துக்கொண்டிருந்தபடி நீர்கொடுத்து உதவ இசைந்ததோ? இம்மட்டோ! இன்னும் உடலிரண்டும் உயிரொன்றுமாக வாழும் தலைவன் தலைவியர்களுக்குள் சடர்விளைத்துச் சீர்கெடுப்பதும் இவ்வறுமையேயாகும். வறுமையால் குடித்தனத்துக்கு வேண்டும் சாமான்கள் யாவும் சேகரித்து வைத்துக்கொள்ள இயல்பற்றுப் போவதால் பெண்களுக்கு வெறுப்பு உண்டாவது சகஜம். பெற்று வளர்த்த தாயே, தரித்திரத்தால் பிணிக்கப்பட்டவனை வெறுப்பாளாகில் இல்லாள் வெறுப்பதும், இல்லாளே வெறுக்குமிடத்து மற்றோர் வெறுத்துக்கொள்வர் என்பதும் சொல்லாமலே விளங்குமன்றோ?

அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும் என்பதும்

இல்லானை யில்லாளும் வேண்டாள்மற்
றீன்றெடுத்த தாய்வேண்டாள். என்பதும்

வறுமைதான் வந்திடிற் றுய்பழுது சொல்லுவாள்
மனையாட்டி சற்று மெண்ணாள் என்பதும்

துதிக்கின்ற மனைவியும் குறைசொல்வள் தந்தைதாய்
சோகமுற வசை கூறுவார். என்பதும்

வாலாய மாய்ப்பெற்ற தாயும் சலித்திடுவள்
வந்தசுற் றமு மிகழுமே
மரியாதை யில்லாம லனைவரும் பேசுவார்
மனைவியும் தூறு சொல்வாள். என்பதும்

நம்முதாதையோராகிய ஆன்றோர் கூறிய அனுபவ நல்லுரைகளன்றோ? மற்றும் சந்தோஷம் என்கிற ஓர் கடலை அறவே வற்றச்செய்வதற் கெழுந்த அகோரமான வடவாமுகாக்கினியும் அத்தரித்திரமே. சதா துன்பக்கடலிலேயே ஆழ்ந்திருக்கும் வறியவர்க்கு எங்ஙனம் சந்தோஷம் உண்டாகும்? அளவிறந்த வீண் எண்ணங்கள் குடிகொள்ளும் இடமும் அவ்வறுமையே. அரசர்களுக்குத் தமது அரசாக்ஷி முறை ஒன்றிலேயே சிந்தை நிற்கும். காமுகருக்குச் சதா மாதர் போகத்தில் மாத்திரமே சிந்தை. யோகிகளுக்கு மோக்ஷம் அடைவதற் கேதுவான மார்க்கத்தில் மட்டுமே சிந்தை. தரித்திரர்களுக்கோ என்றால் அளவிடக்கூடாத அசாத்திய சிந்தையாகும்.

நீதி சாரம்.

வேந்தருக் கரசிற் சிந்தை மிகுந்தகா முகருக் கெல்லாம்
போந்திடு காமச் சிந்தை பொருந்து யோகர்க்கு முத்தி
வாய்ந்திடு வழிமேல் சிந்தை வறிஞருக் களவி லாத
நீந்தொணாச் சிந்தை யென்று நீணிலத் தியங்குந் தானே.

(இன்னும் வரும்)

ப. வீரப்பத் தஞ்சவராயன், கருவிலி.

அன்பே தீர்ப்பு

ஸ்ரீமான். சி. சுப்பிரமணிய பாரதியார் எழுதியது.

எங்கிருந்தோ வந்து இவ்வுலகத்தில் சிலநாள் வாழ்கிறோம். செத்தபிறகு நம்முடைய கதி என்னாகுமோ கடவுளுக்குத் தான் தெரியும். மூன்றேமுக்கால் நாழிகை உயிர் வாழ்வதில் சந்தோஷத்துடன் இருந்துவிட்டுப் போகக்கூடாதா? அடடா! இந்தப் பூமியில் மனித உயிருக்கு எத்தனை கஷ்டம், எத்தனை பயம், எத்தனை இடையூறு, எத்தனை கொலை, எத்தனை துரோகம் எத்தனை கொடுமை, எத்தனை அநியாயம்! ஐயோ பாவம்! பாவம்!!

அடா, மனிதர்களே, எத்தனையோ சாஸ்திரங்களுக்கும், ஆக்கினைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் நாம் மனதார உட்பட்டிருக்க வில்லையா? ஒரு புதுக்கட்டுப்பாடு செய்துகொள்வோமே! அந்தக் கட்டுப்பாடு யாதெனில்:—"ஒருவனுக் கொருவன் மனத்தாலும் தீங்கு நினைப்பதில்லை. ஒருவனுக்கொருவன் பயப்படுவதும் இல்லை."

பானுடரே, இந்த விரதம் எடுத்துக்கொள்ளுங்கள். இது தான் பிழைக்கும் வழி. தெருவில் நடக்கும்போதே முன்பின் தெரியாத மனிதர்கூட ஒருவருக்கொருவர் கோபம் அல்லது அவமதிப்பு அல்லது பயத்தோடு பார்த்துக்கொள்ளுகிறார்கள். மனிதனுக்கு மனிதன் இயற்கையில் விரோதம் என்ற நிலைமையில் உங்களுடைய மூடத்தனமான மனித நாகரீகம் வந்து சேர்ந்திருக்கிறது. இதை மாற்றி அன்பை மூலாதாரமாக்க வேண்டும்.

முதலாவது, சிலருக்குச் சோறு மிதமிஞ்சியிருக்கப் பலர் தின்னச் சோறில்லாமல் மடியும் கொடுமையைத் தீர்த்துவிட வேண்டும். இது இலக்கம் ஒன்று. பூமியின் மீதுள்ள நன்செய், புன்செய், தோப்பு, துறவு, சுரங்கம், நதி, அருவி, குப்பை, தரை, முதலான கடவுளுடைய சொத்தில் வேலிகட்டக் கூடிய பாகங்களையெல்லாம் சிலர் தங்களுக்குச் சொந்தமென்று வேலி

கட்டிக்கொண்டனர்; பலருக்கு ஆகாசமே உடையாய்; வாயு ஆஹாரம்! இதற்கு மருந்தென்னவென்றால், எல்லோரும் சமானம், அண்ணன் தம்பிபோலே என்ற புத்தியுண்டாய் ஏழைகள் வயிறு பசிக்காமல் செல்வர் காப்பாற்றவேண்டும். அது முடியாவிட்டால், ஐரோப்பாவில் அபேதவாத (ஸோஷலிஸ்ட்) கக்ஷியார் சொல்வதுபோலே நிலத்தை சகலருக்கும் பொதுவென்று ராஜ்ய விதி ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும்.

மனிதர் அத்தனைபேருக்கும் போதுமான ஆகாரம் பூமிதேவி கொடுக்கும். பூமிதேவியின் பயனை நேரே கையாளத் தெரியாமல் பொறாமையாலும், அறியாமையாலும், தாறுமாறாக விழல்படுத்திச் சோறுதேடும் நேரத்தில் சோறுதேடாமல், ஒருவருக்கொருவர் கொல்ல வழிதேடி, பலர் வயிறு வாடச் சிலர் வயிறு சீரண சக்தியில்லாமல் போக, மனிதர் பரிதாப சரமாகக் காக்கையிலும் கடைப்பட்ட வாழ்வு வாழ்ந்து வீணே நசித்துப் போகிறோம். ஏழைகள் வருந்தினால் நமக்கென்ன என்று நினைப்பவர் பரமமூடர். பலர் அசௌகர்யப் படும்வரை சிலர் சௌகர்யமடைதல் இந்த உலகத்தில் சாத்தியமில்லை. பொருளாளி நல்ல உடுப்புகள் அணிந்துகொண்டு தெருவில் உலாவுவதையும், அவனுடைய கன்னத்தில் சதை உப்பியிருப்பதையும், அவனுடைய ஏவலாட்களின் தொகையையும், சிறுமையையும், மேற்படி பொருளாளி பிறரை அவமரியாதை செய்வதையும் கண்டு மயங்கிப்போய், அவன் பரமானந்த நிலையில் இருப்பதாக ஏழை நினைக்கிறான். அது தவறு; அவன் மனதில் ஒளிந்து கிடந்து, அவனுயிருக்கு நரகவாதனை செய்யும் துயரங்களை ஏழை அறியமாட்டான். ஒரு வகுப்பின் மனம் மற்றொரு வகுப்புக்குத் தெரியாமலும், ஒருவனுடைய உள்ளம் மற்றொருவனுக்குத் தெரிய இடமில்லாமலும் மனித நாகரீகம் அவ்வளவு மூடத்தனமான நிலைமைக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

வறுமையின் பயன்.

ஏழையின் அழுக்குத் துணியையும், அழுக்குடம்பையும், சிரைக்காத முகத்தையும் பார்த்துப் பொருளாளியின் குழந்தை

கள் மேற்படி ஏழை தமது மனித பதவிக்குத் தாழ்ந்த பன்றி, நாய், மாடு, வகுப்பைச் சேர்ந்தவன் என்று நினைக்கிறார்கள். ஐரோப்பாவில் ஏழைக்கும் பொருளாளிக்கும் விரோதம் முற்றிப் போய், உள்நாட்டுச் சண்டைகள் நேரிட்டும், அப்படி நேரிடாதபடி தடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் ஜனங்களை உள்நாட்டில் ஒன்று சேர்க்கும்பொருட்டாக, வெளி நாடுகளின்மீது சில ராஜாக்கள் போர்தொடங்கக் கண்டங்களில் போர் பரவியும், பூமண்டலம் தூள்தூளாகிறது. கிழக்குத் தேசங்களிலும், யுத்தமில்லாமல் சமாதானத்துடன் இருக்கும் இடங்களிலும், திருஷ்டாந்தமாக, நமது தமிழ் நாட்டுப் பறையர்கூடக் கண்விழித்துத் தாங்கள் மனிதர் என்பதைத் தெரிந்துகொண்டு மற்ற ஜாதியாருக்குத் தாங்கள் சமானமென்று சபைகூடித் தீர்மானம் செய்கிறார்கள். கிழக்குத் தேசங்களில் சமாதான எல்லைகளிலே கூட ஏழைகளுக்குக் கண் திறந்து பொருளாளிகளை எதிர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

சுருங்கக் கூறுமிடத்தே, சோற்றுக்சாக மனிதர் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் அநியாயம் நாய்களும் பன்றிகளும் தமது ஜாதிக்குள்ளே செய்யும் வழக்கமில்லை யென்பது, லோக பிரசித்தமான விஷயம். ஆங்கில பாஷையில் பைரன் என்ற மஹாகவி ஒரு ஸமயத்தில் * மனிதரை நாய்களே என்று கூவி

* குறிப்பு:—மனிதரைப்போலிருக்கும் மனிதப் பதர்களை எந்த மிருகத்துக்கும் எந்தப் புழுப்பூச்சிகளுக்கும் ஒப்பிட்டுச் சொல்லக் கூடாது. ஏனென்றால் ஒவ்வொரு மிருகங்களிடத்திலும் புழுப்பூச்சிகளிடத்திலும் ஒவ்வொரு நற்குணங்கள் இயற்கையாக அமையப்பெற்றிருக்கின்றன. இந்தப் பதர்களுக்கோ,

வணக்கம்வரும் சிலநேரம் குமரக் கண்டு
வலிப்புவரும் சிலநேரம் வலிய செய்யக்
கணக்குவரும் சிலநேரம் வேட்டை நாய்போல்
கடிக்கவரும் சிலநேரம் கயவர்க் கெல்லாம்.

என்றபடி பலவிதமான துர்க்குணங்கள் குடியாகவே இருக்கின்றன. அன்றியும்,

காலையிலொன் றுவார் கடும்பகலில் ஒன்றுவார்
மாலையிலொன் றுவார் மனிதரெல்லாம்.

ஞர். பிறகு உண்மையில் மனிதரைக் காட்டிலும் நாய் ஜாதி மேம்பட்டதாகையால் மனிதரை நாய்களே என்று சொல்லியதிலிருந்து நாய் ஜாதிக்கு அவமரியாதை செய்வதாக ஏற்படுமாதலால், அதை மாற்றி மறுபடி "ஏ, மனிதரே!" என்று கூவிவிட்டார்.

என்றும் கூறப்பெற்றிருக்கிறது இத்தன்மையுடைய பதர்களை நோக்கி ஏ! நாய்களே! என்று கூறுவோமாயின் அது பொருந்துமா? ஏனென்ருல் நாயினிடத்திலிருந்து இந்தப் பதர்கள் அநேக நற்குணங்கள் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. இதுபற்றியே,

வெண்பா.

பேராசை அற்பம் பெரினும் பெருமகிழ்ச்சி
போராத வீரம் பிரபுத்தி —சோராமை
உற்றதுயில் வல்லே உணர்ந்தொழுகை நாயினிடம்
கற்பகத் தருங் குணங்கள் காண்.

என்பதனல் நாயினிடத்திலிருந்து அநேக குணங்களை மனிதன் கற்க வேண்டி யிருப்பதாலும்,

யானை யனையவர் நன்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

என்ற வெண்பாவின்படி யானையானது தனக்குத் தினம் பாகன் கவளம் கொடுத்துக்கொண்டு வருவதை நன்ருய் அறிந்தும் சினம் மதம்கொண்ட காலத்து அப்பாகனையே கொல்லும்; நாயானது தன்னை வளர்த்தவன் தன்னைக் கொல்லும்படி வேலைப் பிரயோகித்தகாலத்து அவ்வேல் சரீரத்தில் ஊடுருவி நிற்கும்போதும் வாலைக் குழைத்துக்கொண்டு அவனருகே செல்லும். ஆகையால் நன்றி மறக்கும் இயல்பினையுடைய யானையை யொத்த கீழ்மக்களது நட்பை ஒழித்து, எந்நாளும் நன்றி பாராட்டும் நாயை யொத்தவரது நட்பைத் தேடிக்கொள்ளவேண்டும்; என்று ஆன்ருேர் கூறியிருக்கின்றனர்.

மேற் கூறப்பெற்ற பைரன் என்ற ஆங்கில மஹா கவியானவர் மனிதர்களை நாய் என்று கூறுவதால் நாய்ச்சாதிக்கு அவமரியாதை ஏற்படும் என்று கூறியது சரியே. ஆனுல் அத்தகையோர்களை மனிதப் பதர்களே! என்று கூவாமல் மறுபடியும் மனிதரே! என்று கூவியதானது விசனிக்கத்தக்கதா யிருக்கிறது. பத்திராதிபர்.

தீர்ப்பு.

அன்புதான் இதற்கெல்லாம் தீர்ப்பு. எல்லா மனிதருக்கும், ஆணுக்கும், பெண்ணுக்கும், குழந்தைக்கும், வெள்ளைக்கும், மஞ்சளுக்கும், செம்புக்கும், கருநிறத்து நீகிரோவருக்கும் சகலருக்குள்ளும் பரமாத்மா பரம புருடன் ஆகிய கடவுளே! அந்தர்யாமியாக நின்று வெளித் தொழில்களை நிகழ்த்துகிறார். ஆகலால், மானுடரே! சகோதர உணர்ச்சியே தீர்ப்பு. சகோதர உணர்ச்சியைப் பற்றிக் கவிதைகள் பாடுவதும், நீதி நூல்களில் புகழ்வதும், வர்த்தமானப் பத்திரிகைகளில் கர்ச்சனைசெய்வதும் இவ்வுலகத்தில் வெகு சாதாரணமாக இருக்கிறது. நடையில் எந்தக் கண்டத்திலும், எந்த மூலையிலும் அந்த உணர்ச்சி காணப்படவில்லை. அது நடைக்கு வரவேண்டும். கண் இல்லாதவன் வானசாஸ்திரம் படிக்க முடியாது. இன்பமோ அன்புலகத்தைச் சேர்ந்த பதார்த்தம். ஆதலால் அன்பில்லாவிடின் இன்பமில்லை. இன்பத்தைத் தேடித்தேடி எங்கும், எப்போதும் எதனிலும் காணாமல் வருந்துகிற மானுடரே கேளுங்கள்!

அன்புண்டானால் இன்பமுண்டென்று புத்த பகவான் கண்டு பிடித்துச் சொன்னார். அந்த யுக்தியின் மகிமையை நேரே மனிதர் தெரிந்துகொள்ளாமல் அவர் காட்டிய பயனை அடையாமலே இருந்து வருகிறார்கள். அன்பு கொள்கையில் இருந்தால் போதாது. செய்கையில் இருக்கவேண்டும். உன்னிடம் ஒருகோடி ரூபாய் இருந்தால், அந்த ஒருகோடி ரூபாயையும் தேச நன்மைக்காகக் கொடுத்துவிட்டு நீ ஏழையாகிவிடத் துணிவாயானால், நீ உன் தேசத்தின்மீது அன்புடையவனாகக் கருதப்படுவாய். உன்னுடைய குழந்தையின் உயிரைக் காக்கும்பொருட்டாகப் புலியின் வாயில் நீபோய் முதலாவது கையிடத் துணிவாயானால், நீ குழந்தையிடம் அன்புடையவனாகக் கருதப்படுவாய். பறையனுக்கு ஸ்நானம் செய்வித்துப் பக்கத்தில் வைத்துக்கொண்டு சாப்பிட்டால், நீ மனித சாதியினிடம் அன்புடையவனாக விளங்குவாய்.

எல்லாச் சீவர்களிடத்திலும் ஆரம்பப் பழக்கத்துக்கு, எல்லா மனித உயிர்களிடத்திலும் தெய்வபக்தி காண்பித்தால் உலகத்தின் துயரங்கள் தீர, நியாயமான ஜனவகுப்பு ஆரம்பமாகவுண்டாகும். (லோகோபகாரி.)

வைத்தியம்.

(ஆபத்சகாயம்)

(264-ம் பக்கத் தொடர்ச்சி.)

முத்தக்காசு என்ற கோரைக் கிழங்கைப் பாலிற்கொள்ள, கற்றுழை நாற்றம், பித்தத்தால் உண்டாகும் வீக்கம், சத்திசுரம், நீர்வறட்சி, தாபசோபம் நீங்கும். இக்கிழங்கை மல்லி, பேய்ப்புடல், சுக்கு, சிற்றரத்தையோடு சமனிடையாகச் சிதைத்துக் கியாழம் வைத்துச் சாப்பிட, பித்தசுரம் நீங்கும்.

பிராய்மூலத்தைப் பாலிற்கொள்ள, (18) வகை வண்டுகடி, வெண்குஷ்டம், விரியன்கடி விஷத்தால் உண்டாக்கும் குஷ்டம் நீங்கும். சிராய்போல் உடலில் எழும்பும் சாசரப்பு நீங்கும். இம்மரத்தின் பாலை பச்சைக் கடலைமாவில் புரட்டிக் கடலைப் பிரமாணம் உண்டைசெய்து சாப்பிட்டுவர நாதம் கட்டும்.

புங்கு மூலத்தைப் பாலிற்கொள்ள, புண்புரைகள், சூலை, அரையாப்பு, கிரந்தி, பலகரப்பன், குஷ்டம், சில்விஷம் தீரும்.

வெள்ளெருக்கின் மூலத்தைப் பாலிற்கொள்ள, கிரந்தி, குஷ்டம், விஷங்கள், வண்டுகடி, செய்யான்கடி, அறுபுள்ளி வண்டு கடி, மாவட்டைக்கடி, குறைநோய் தீரும்.

வேலிப்பருத்தி மூலத்தைப் பாலிற் கொள்ள, கடிவிஷம், கரப்பன், வெட்டை, பல்வகைக்கிரந்தி, சூலை, மருந்தீடு, கைகால் பிடிப்பு, வாயு தீரும்.

வெள்ளறுகு சமூலத்தைப் பாலிற்கொள்ள, சில்லன்ற விஷம், சிரங்கு, சொறி, குஷ்டம், கிரந்தி, வெட்டை, வெடிசூலை, காமாலை, விஷகரப்பன், வீக்கம் தீரும். இதைத் தண்ணீரில் வேகவைத்து வெதுப்புடன் வாயில்விட்டுக் கொப்பளிக்கப் பல்வலி தீரும்.

சிவன்வேம்பு மூலத்தைப் பாலிற்கொள்ள, தீராத சில்விஷம், காலிற்காணும் பிளப்பு, குஷ்டம், கரப்பன் வகைகள், வாயுதீரும். இம்மூலிகைச் சமூலத்தை உலர்த்திச் சூரணம்செய்து சர்க்கரை கலந்து, திரிகடிப் பிரமாணம் ஒருமண்டலம் கொள்ள, (18) குஷ்டம், பாதத்திலுண்டாகும் விரிவு, மேல்தடிப்பு, படர்தாமரை, அரிப்பு, தேகத்தில் முள்ளுகொண்டு குத்துவதுபோல் குத்துதல், திமிர், தலைநோய் தீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டையை அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு அரைக்கால் ($\frac{1}{8}$) படி ஆவின்பால் அல்லது வெள்ளாட்டுப்பாலில் ஒருமண்டலம் அல்லது அரைமண்டலம் கொள்ள, சுரம், வெட்டை, அரையாப்பு, வாயு, சூலைக்கட்டு, சூலைப்பிடிப்பு, வெடிசூலை, மேனியிற் கரடுமுரடாய்க் கட்டும் சூலை, உள்மூலம், கருப்பத்தை அழிக்கும் கிரந்தி, யோனியைத் தின்னும் கிரந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, அரிகிரந்தி, கருப்பவாயு தீரும். மேனி பொன்போலாம். இந்தவேர் சுமார் ஒருபலத்தை நையத் தட்டி, ஒருபடி ஆவின்பாலில் போட்டுக் காய்ச்சி, பிரைகுத்தி வைத்திருந்து மறுநாள் கடைந்து எடுத்த வெண்ணெயையும் மோரையும் அன்னத்துடன் புசித்து, தாகத்துக்கு அந்தமோரைத் தானே சாப்பிட, மூல முளை வேரோடு அழுகி விழுந்து விடும். இந்தப்படி மூன்றுமுறை செய்யவும். நோயாளியின் தேக நிலைமைக்குத் தக்கபடி வேரின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம். புளிதள்ளிப் பாலும் அன்னமுமாகப் பத்தியம் கொள்ளவும்.

ஆவரிவேர்ப் பட்டையை அரைத்து கொட்டைப்பாக்களவு ஆவின்பால் அல்லது வெள்ளாட்டுப்பாலில் கொள்ள விஷசெந்துக்களின் கடிவிஷம், நஞ்சுப்பொருள் விஷம், கரப்பன் வகைகள் தீரும். நரைதிரை மாறும். இவ்வேருடன் மிளகு, சிற்றரத்தை கூட்டிக் கியாழம்செய்து (3) நாள் கொள்ள, எண்ணெய்ச் சிக்கலால் உண்டாகும் நீர்த்தோஷம், சுரம், வெப்பு, நெஞ்சுச் சளி நீங்கும். இதன் இலையை அரைத்து கொட்டைப்பாக்களவு அரைக்காற்படி வெள்ளாட்டுப்பாலில் (3) நாள் கொள்ள மஞ்சட்

காமாலை தீரும். இந்த இலையை அரைத்து சிரங்கிற் பூசிவைத் திருந்து மாலையில் ஸ்நானம் செய்துவரத் தீரும்.

(இன்னும் வரும்) (கு. ஞானபூபதி.)

மனுமுறைகண்ட வாசகம்.

(263-ம் பக்கத் தொடர்ச்சி.)

உங்களுக்கே ஒப்பாகுமல்லது தருமதேவதை சம்மதிக்குமோ! கன்றையிழந்து வருந்துகின்ற இப்பசுவின் சஞ்சலத்தையாவது சாந்தப்படுத்துமோ? இப்படி நீங்கள் சொல்லியது என் முகத்தைக் குறித்தோ, என் புத்திரனுயிருக் கிரங்கியோ, அல்லது உங்கள் சீவனத்தை எண்ணியோ, எதுபற்றியோ? உலகத்தையாளும் அரசன் ஆசைபற்றியாவது, வெகுளிபற்றியாவது தாட்சண்ணியம் பற்றியாவது, உறவுபற்றியாவது நடுநிலையாக நியாயங்கண்டு சொல்லாமல் மாறுபட்டால், அதை மறுத்து இது விஷயத்தில் அரசன் நம்மைக் கொல்லுவானாயினுங் கொல்லட்டும்; அவனுக்கு உறுதி கூறுவதே நமக்குக் கடனென்று நிச்சயித்துக்கொண்டு, நியாயங்கண்டு நடுநிலையாகச் சொல்வது மதியுடைய மந்திரிகளுக்குத் தருமமாக விருக்க, நீங்கள் அதை நினையாமல் இப்படிச் சொல்லியது என்ன நினைத்தோ? சந்திர சூரியர் திசைமாறினாலும் சமுத்திரந் தடைமீறினாலும், மகாமேரு நிலைகுலைந்தாலும், மனங்கலங்காது, விவகாரங்களிற் பழுதுவாராது பாதுகாக்கின்ற குணத்தையுடைய நீங்கள், துர்மந்திரிகளைப்போல நியாயம் பாராது, நயிச்சிய வார்த்தைகளைச் சொன்னீர்கள். இது காலவேற்றுமை யென்றே யெண்ணுகிறேன். தன்னைக் கொடுத்தாவது தருமத்தைத் தேடவேண்டுமென்னும் பெரியோர் வார்த்தையைப் பிடிப்பது சற்குணமுடையோர்க்குத் தகுதியென்றும், தாய்தந்தையிடத்திலாயினுந் தராசுகோல் போலச் செப்பமாக நின்று தீர்ப்புக் கொடுக்கவேண்டுவது அரசர்க்கு அவசியம் வேண்டிய சற்கருமமென்றும் எனக்கு அடிக்கடி யறிக்கையிட்ட நீங்கள், இன்று அதோகதியில் தள்ளிவிடத்தக்க அநியாயத் தீர்ப்பை யங்கீகரிக்கப் போதிக்கின்றீர்கள்.

இது உங்களிடத்து நேரிட்ட அவஸ்தை வசமென்றே யெண்ணுகிறேன். ஒருவரிடத்துத் தண்டனை விதிக்கும்போது எவ்வுயிர்களுந் தன்னுயிர்போ லெண்ணுவதும், எந்தப்பொருள் எந்தப் பிரகாரமா யிருந்தாலும் அந்தப் பொருளினுண்மையை யறிந்து கொள்வதும், உருவுநோக்காது அறிவை நோக்குவதும், ஊழ்வினை நோக்காது செய்வினை நோக்குவதுமாகிய இப்படிப்பட்ட இலக்கணங்களுக்குப் பொருந்த விதிக்கவேண்டுமென்று எனக்கு அறிவித்துவந்த நீங்கள், இன்று என் புத்திரன் இரக்கமுள்ளவனென்றும், அவன் அசாக்கிரதையினால் கொன்றதல்லவென்றும், பழவினைபாற் பசுங்கன்று மடிந்ததென்றும், அதனால் அதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்விக்க வேண்டுமென்றும், வாதியை மாத்திரம் வரவழைத்துக்கொண்டு நடுக்கொள்ளைக்காரன் நியாயந்தீர்த்தா னென்பதுபோற் சொல்லி நின்றீர்கள். ஓகோ! அமைச்சர்களே! நீங்கள் அந்நாளிலிருந்த அமைச்சர்களல்ல; இந்நாளில் என்னைக்கெடுக்க நினைத்துக்கொண்டு எங்கேயிருந்து வந்தவர்களோவென்று எண்ணுகிறேன். ஐயோ! எனக்கு இப்படிப்பட்ட அநியாயத்தைக் கற்பித்தோ இம்மை மறுமையின்பங்களை வருவிப்பீர்கள்! என்றும் மீளாத சிவகதியை யடையத்தக்க உறுதிவார்த்தைகளைப் பேசிய நீங்கள், இன்று என்றும் மீளாத அவகதியை யடையத்தக்க இழிவுள்ள வார்த்தைகளைப் பேச எங்கே கற்றுக்கொண்டீர்களோ! ஆ! ஆ!! இந்த ஓரவஞ்சனையையுற்று நினைக்குந்தோறும் நெஞ்சந் திடுக்கிடுகின்றதே! உங்கள் சொற்படி இதுகாரியத்தில் உடன்பட்டேனானால் தருமமும் தவமும் சலிப்படையுமே! இக்காலத்தில் எனக்கு மேற்பட்டவர்களில்லையென்று வழக்கழிவு செய்து வஞ்சித்துப் பேசுவேனானால், காலம்போகும், வார்த்தை நிற்குமே! மநுநூலில் சொல்லிய நீதியின்படி நடத்துகின்றபடியால், மநுச்சோழன் மநுச்சோழனென்று நெடுந்தூரம் நீண்ட பெயரைச்சுமந்த நான், இதற்குச் சம்மதித்தேனானால் எழுத்தறியாதவன் ஏட்டைச் சுமந்ததுபோலவும், கண்ணில்லாதவன் கண்ணாடியைச் சுமந்ததுபோலவும், வாசனையறியாதவன் மலரைச் சுமந்ததுபோலவும் வீணாகவே

யிந்தப் பெயரைக்கொண்டானென்று ஏழுலகத்தாரும் இகழ்ந்து பேசுவார்களே! இன்றைக்கு என் புத்திரன் செய்த இந்தக் கொடுங்கொலையாகிய பாதகத்துக்குப் பரிகாரஞ்செய்து, இலே சாகவிட்டு, நாளை மற்றொருவன் இதைப்பார்க்கிலும் சிறிய கொலை யொன்று செய்யக்கண்டு, அவனைக் கொலை செய்விப்பேனானால், 'தருமமறியாத இவ்வரசன் தனக்கொன்று பிறர்க்கொன்று செய்கிறான்' என்று பார்த்தவர்களெல்லாம் பழித்துப் பேசுவார்களே; அல்லது "தன்வீட்டு விளக்கென்று முத்தமிட்டால் சுடாது விடாது" என்பதுபோல என் புத்திரன் செய்த கொலையென்று புத்திராபேக்ஷையால் அடக்கிக் கொள்வேனானால், அதுபற்றி வரும் பழிபாவங்கள் என்னை யடையாமலிருக்குமோ? ஆதலால் இப்பசுவானது அருமையான இளங்கன்றை யிழந்து வருந்துகின்றதைத் தவிர்க்க வலியில்லாதவனாகிய நானும், இந்தப் பசுவைப்போல நெடுநாளாக வருந்தி அருமையாகப்பெற்ற என் புத்திரனைப் பழிக்குப் பழியாகக்கொன்று வருத்தங் கொள்வதே தகுதி என்று சொல்லினார்.

அதுகேட்டு மனங்கலங்கிய மந்திரிகளுக்குள் ஒரு மந்திரியானவர் அரசனை வணங்கித் "தருமநெறி தவறாத தலைவனே! சாவதானமாகத் தயவுசெய்து என் வார்த்தையைக் கேட்டருள வேண்டும். ஆன்மாக்களுக்கு அறிவின் உயர்வு தாழ்வுபற்றிப் புண்ணிய பாவங்களும் ஏறிக் குறைந்திருக்கும் என்னுஞ் சுருதி வாக்கியத்தின்படி தர்மார்த்த காம மோக்ஷங்களைப் பெறுதற்கு யோக்கியமான அறிவுள்ள மனிதப்பிறவி யெடுத்த சீவர்களுக்குள் "ஆனைமதப்பட்டு அடவியழித்தது" என்னும் நியாயம் போல மதத்தினால் காமக்குரோதாதிகள் காரணமாக ஒருவரை யொருவர் கொலை செய்தாரானால் அக்கொலைக்கு ஈடாகக் கொன்றவரைக் கொலை செய்விக்கக் கடவரென்றும், அப்படியன்றிக் "காக்கையேறிப் பனம்பழம் விழுந்தது" என்னும் நியாயம் போல் வலிமை பகைமை முதலானவை யில்லாமல் விதிவசத்தாலொருவர் இறந்ததற்கு வியாஜமாக முன்னிட்டு அவர்களை அவ்வாறு இனி முன்னிடவொட்டாமலிருக்கத் தண்டித்து முன்

னிட்டதினல் வந்த பாபத்துக்குப் பரிகாரஞ் செய்விக்கக்கடவ ரென்றும், பொதுவாக தரும நூல்களில் விதித்திருக்கப்பட்ட விதியை இன்று கன்றின் கொலைபற்றி நீர் செய்விக்க எண்ணிய அபூர்வமான விதி விலக்குகின்றதே; இது தகுதியைக் கடக்கின்ற குற்றமென்று சொல்வதற்கு இடமுண்டுபண்ணுமே'' என்றார். அதுகேட்ட அரசன் "மந்திரியே! நீர் பயனைத்தரும் விருக்ஷத்திலுள்ள பழத்தைப்பாராது பிஞ்சைப்பிடித்ததுபோல் பிடித்தீர். நன்றாயிருந்தது உமது வார்த்தை! அறிவின் உயர்வு தாழ்வுகளைப்பற்றிப் புண்ணிய பாவங்கள் ஏறிக் குறையுமென்று பூர்வ பாகத்திற் சொல்லிய சுருதி, உத்தரபாகத்திற் பரமேசுவரன் ஆன்மாக்கள்தோறும் விகற்பமில்லாமல் நிறைந்திருக்கிறபடியால் மாயையின் காரியமாகி, வேறுபட்ட அறிவை நோக்காமல் அப்பரமேசுவரனை நோக்கி, எல்லாவுயிர்களையும் சமமாக வெண்ணி நடத்தவேண்டும் என்ற உத்தரபாகத்தின்படி பிறப்பு, குணம், சாதி, தொழில்முதலான விகற்பங்களை நாடாது, உயிர்க்கொலையினிடத்துச் சமானமாகத் தண்டிப்பதே தகுதி; என் புத்திரன் தேரிலேறிக்கொண்டு செல்வச் செருக்கினல் மறதிபற்றியே இப்பசுவின் கன்றைக்கொன்முன்; ஆதலால் இவனைக் கொல்வதே முடிவு'' என்று சொன்னர்.

(வடலூர் வள்ளல்.)

சங்கீதம்.

(229-ம் பக்கத் தொடர்ச்சி.)

த்ருவோமட்ய ரூபகஸ்ச்ச ஜ்ஜம்பா த்ருபுடயேவச்ச
அடதாளைக தாளேச்ச ஸப்ததாளா பிரகீர்த்திதா:,

என்ற சுலோகத்தின்படி துருவதாளம், மட்டியதாளம், ரூபக தாளம், சம்பைதாளம், திரிபுடைதாளம், அடதாளம், ஏகதாளம் என்னும் எழுவகைத் தாளங்களின் அங்கங்களாகிய திசாலகு, சதுரசிரலகு, மிசிரலகு, கண்டலகு, சங்கீரணலகு என்பவை கட்கு முறையே 3, 4, 7, 5, 9 அட்சரங்கள் கொண்ட அங்கப் பிராண லட்சணத்தின்படி மாறிமாறி வெவ்வேறு விதமான தாளங்கள் போட ஆரம்பித்தது. வித்துவான் அதற்குத் தக்க

படி பாடியும் அடிக்கடி தாளம் மாறிப்போவதால் கோபம் வந்து சோற்றுப்பானையை ஓங்கி ஒரு உதை உதைத்தார். உடனே பானை தகர்ந்து வெந்த சோறெல்லாம் கீழே கொட்டுண்டு போனதுமன்றி, வித்துவானுடைய காலும் வெந்துபோயிற்று.

முடிவில் எல்லோரும் சத்திரத்தண்டை வந்து சந்தித்து, ஒவ்வொருவரும் தத்தமக்கு நேர்ந்த விஷயங்களை வெளியிட்டனர். பிறகு அனைவரும் இதற்கு என்னசெய்கிறது? நாழிகையாகிறதாதலால் இராஜ சபைக்குப் போய்வந்து, பிறகு சாப்பிடலாம் என்று புறப்பட்டு அரசனை வந்து கண்டார்கள். அப்போது மந்திரி சாஸ்திரிகளைப் பார்த்து, போசனம் ஆயிற்றோ? என்று கேட்டான். எல்லாம் இருந்தும் போசனம் செய்யச் சரிப்படவில்லையென்று சாஸ்திரிகள் சொன்னார்கள். அரசன், என்ன சங்கதி? யென்று கேட்டான். சாஸ்திரிகள் நடந்த சங்கதியைச் சவிஸ்தாரமாகச் சொன்னார்கள். அதுகேட்டு அரசன் முதலானவர்களும் நகைத்தார்கள்.

பிறகு அரசன் அவர்களைப் பார்த்து, சாஸ்திரிகளே! நீங்கள் சாஸ்திரங்களை நன்றாய் உருப்போட்டுப் படித்திருக்கிறீர்கள். உங்களுக்கு உலகஞானம் கொஞ்சமும் இல்லை. உலக ஞானம் இல்லாமல் சாத்திர ஞானம்உபயோகப்படாது. அதையும் நன்றாய் அறிந்துகொள்ளுங்கள் என்று சொல்லிச் சிறிது பரிசு கொடுத்து அனுப்பினான்.

திருக்குறள்.

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார்.

ஒரு மனிதனுக்குத் திரண்ட செல்வத்தைக் கொடுத்த கடவுள், அச்செல்வத்தை நன்மார்க்கத்தில் செலவழிக்க அவனுக்குப் புத்தி கோசரத்தையும் கொடுக்காதிருந்ததுபோல், பிரபல சங்கீத ஞானம் உடையவர்களும் பாடகர்களுமாகிய சில வித்துவான்கள் தம்முடைய அருமையான சங்கீத ஞானரத்தினத்தைப்

(இன்னும் வரும்.) (ஞானக்களஞ்சியம்.)

ஞானசூரியன் 2-ம் வருடக் குறிப்பு.

நமது சந்தாநேயச் சகோதர சகோதரிகாள்!

இந்தப் பங்குனிமீ சஞ்சிகையோடு நமது 'ஞானசூரியன்' உதயமாகி ஒருவருடம் பூரணமாகிவிட்டது. சித்திரைமாதம் முதல் இரண்டாவது வருடம் ஆரம்பமாகிறது. இதுவரையில் நமது 'ஞானசூரியனை' அன்புடன் ஆதரித்து வந்ததுபோல் இவ்வருடமும் ஆதரிப்பதுமன்றி ஒவ்வொரு சந்தாதாரரும் குறைந்தது இரண்டு (2) சந்தாதார்களையாவது புதிதாகச் சேர்த்துக் கொடுப்பார்களானால் இன்னும் நல்ல கிளேஸ் கடிதத்தில் சில ஆப்டோன் படங்களுடன் செவ்வனே நடத்தப்பெறும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறோம். ஏனென்றால், பத்திரிகை இனிது நடைபெறுவது பத்திராதிபரின் திறமையைப் பொறுத்ததானாலும் சந்தா நேயர்களின் ஆதரவையே முக்கியமாக எதிர்பார்க்க வேண்டியதாயிருக்கிறதென்பது நேயர்கள் நன்கறிந்ததேயாம்.

தற்காலம் வி. பி. முதலான சார்ஜ்கள் அதிகமாக இருப்பதால் சந்தாத் தொகை ரூ. 1—8—0-யை மணியார்டரில் அனுப்பினால் நேயர்களுக்கு இலாபமிருக்கிறதென்பதை ஞாபகப்படுத்துகிறோம். ஆனால், வி. பி. யில் அனுப்புப்படி எழுதினாலும் அனுப்பிவைக்கிறோம்.

சித்திரைமீ பத்திரிகையை வி. பி. யில் அனுப்பாமல் சாதாரணமாகவே புக்போஸ்டில் அனுப்புவதால் ஒவ்வொரு சந்தா நேயர்களும் சித்திரைமீ 20-ம் தேதிக்குள் சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்பி விடவேண்டியது. அனுப்பத் தவறினால் அவர்கள் சந்தாதார்களாய்ச் சேர விருப்பமில்லாதவர்களாக் நினைத்து வைகாசிமீ பத்திரிகைமுதல் நிறுத்திவிட வேண்டிவரும். ஆகையால் இதைக் கண்ணுறும் அன்பர்கள் சிரமத்தைப் பாராமல் தங்கள் தங்கள் நண்பர்களையும் சந்தா நேயர்களாகச் சேர்த்துக் கொடுத்து நமது 'ஞான சூரியனை' எப்போதும் ஆதரித்து வருவீர்களென்று நம்புகிறோம்.

சில அன்புடைய சந்தா நேயர்கள் தங்கள் 2-ம் வருடச் சந்தாவை முன்பணமாகத் தாமாகவே அனுப்பியிருப்பதால் அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறோம். இப்படி எல்லாரும் அனுப்பினாலல்லவா நமக்கும் உற்சாகமேற்பட்டு செய்யவேண்டிய காரியங்களை சரிவர செய்யமுடியும் என்பதை நேயர்கள் சற்று நிதானிப்பார்களாக.

மானேஜர்,

'ஞான சூரியன் ஆபீஸ்'

விஜயபுரம், திருவாரூர்.

ஜனங்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்?

வேதாந்த பாஸ்கரன்

என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது ஞாயமா! ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டேனென்குதே!! என ஓலமிடுபவரைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிகமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிரபஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆதலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் கமல நீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மரணமாவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது அறுப்பதற்கு கத்தி தீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் சாலமெல்லாம் கதை, காவியம், பகடி, பரிகாசவேடிக்கை விளையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிற காலத்தில் சங்கரா! சங்கரா!! என்று பிதற்றுவதிற் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேன்வண்டானது தானும் தேனையுண்ணாமல் தேனை எடுக்க வருபவரையுங் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைந்து, நீங்கள் ஆத்மலாபம் பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை தடுக்காதிருங்கள். ஆத்மாநுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமைவாய்ந்த நமது வேதாந்த பாஸ்கரன் ஓர் சிறந்த வழிகாட்டியாகும். ஏனெனில் சிலர் எழுதிய சாடு முரடான வசன நடைகளைப்போலின்றி நளினமான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூற்களிலிருந்தும், மேற்கோள் தீட்டி மிக அழகாயும், சமரசமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முஹம்மதியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாமதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துலாவுவதானது தமிழ் நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை ரூ. 1—0—0

யோக ரகசியம் (ஒருபாகம்) விலை அணா 0—6—0

விலாசம்:—மானேஜர், கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ், விஜயபுரம்—திருவாரூர். S. I. Ry.

இப்பத்திரிகை ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால் தமது விஜயபுரம் கருணாநிதி அச்சியந்திரசாலையில் பதிப்பித்துப் பிரசுரிக்கலாயிற்று.